# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 35 | June 2023 | Issue 6



வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை விருதுநகரில் மாநில நிர்வாகிகள் சந்தித்த போது. உடன் விருதுநகர் மாவட்ட TNROA நிர்வாகிகள்



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள TNROA கட்டிடத்தினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.நேரு அவர்கள் 29.06.2023 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் திரு.மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., மாநகராட்சி மேயர் திரு.ந.மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் திரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., TNROA மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன், பொருளாளர் வே.சோமசுந்தரம், மாவட்டத் தலைவர் பிரகாஷ், செயலாளர் பிரேம்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

தனிப்பிரதி விலை ரூ.10/-
*Per Copy Rs.10/-*

ஆண்டு சந்தா ரூ.120/-
*Annual Subscription Rs.120/-*



திருச்சி சங்கக் கட்டிடத் திறப்பு விழாவில் மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களுடன் மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன்



சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டக் கிளையில் நடைபெற்ற சங்கக் கல்வெட்டு மற்றும் கொடியேற்று விழாவில் மாநிலத் துணைத் தலைவர் தோழர் வெ.அர்த்தநாரி






சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற சேலம் வட்டக் கிளைப் பொதுக்குழுவில் மாநிலத் துணைத் தலைவர் தோழர் குமரேசன் மற்றும் வெ அர்த்தநாரி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்





திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டப் பொதுக்குழுவில் மாநிலப் பொருளாளர் தோழர் வெ.சோமசுந்தரம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்

கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டப் பொதுக் குழுவில் மாநிலச் செயலாளர் தோழர் அன்பழகன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்

# கனவு மெய்ப்பட வேண்டும்

**1964** ஆண்டு சங்கம் வளர்த்த மதுரையில் உதித்த தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் 59 ஆண்டுகள் கடந்து தளர்வின்றி வீறுநடை போட, தமிழகத்தின் 14,000 உறுப்பினர்களின் ஒன்றுமையே காரணம்.

கடந்த மே மாதம் சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் தொடர் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக, வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காத்திருப்புப் போராட்டத்திற்குப் பின்பாகவும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் உள்ளிட்ட உயர் அலுவலர்களைத் தொடர்ந்து சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தியதன் காரணமாக தற்போது முதற்கட்டமாக 2004 முதல் 2019ஆம் ஆண்டு முடிய துணை ஆட்சியர் பட்டியல்கள் திருத்தம் மேற்கொண்டு 110 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. வருவாய்த்துறை வரலாற்றில் மிக அதிகமான பதவி உயர்வு இது என மகிழ்வு கொண்ட போதும், 45 துணை ஆட்சியர்களின் வட்டாட்சியர் பதவி இறக்கம் அனைவரையும் வருத்தத்தில் ஆழ்த்தி உள்ளது.

மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அதன் காரணமாக பதவி இறக்கம் வழங்கப்பட்டாலும், பல ஆண்டுகள் துணை ஆட்சியர்களாக பணிபுரிந்தவர்கள் மீண்டும் தாய் மாவட்டத்தில் வட்டாட்சியராகப் பணிபுரிவதென்பதை ஏற்பது கடினம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பட்டியல் திருத்தத்தில் எந்த நிலை அலுவலருக்கும் பதவி இறக்கம் தவிர்க்கப்பட வேண்டும் என தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் வரை விவகாரம் கொண்டு செல்லப்பட்டும் தீர்வு ஏற்படாமல் உள்ளது. ஆனால், காலியிட மதிப்பீடு அனுமதி, ஓய்வு மற்றும் மரணமடைந்தவர் பெயர் நீக்கம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் ஏற்கப்பட்டதால், பாதிப்பு எண்ணிக்கை என்பது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் மூன்று வெவ்வேறு தீர்ப்புகளின் காரணமாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் அசாதாரண நிலை ஏற்பட்ட போதும், சங்கத்தின் தொடர் முயற்சியின் காரணமாக பாதிப்பு என்பது பன்மடங்கு களையப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடும்போது பணியிறக்கம் பெற்றுள்ள பல அலுவலர்கள் மீள பதவி உயர்வு பெறுவர் என உறுதியளிக்கப்பட்ட போதும், பணியிறக்கத்தை முழுமையாக களைந்திட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் தொடர்ந்து போராடும் என உறுதியளிக்கப்படுகிறது.

பதவி இறக்கம் பெறும் அலுவலர்களின் பணிப் பாதுகாப்பு அரசாணை, இளநிலை / முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதி திருத்த அரசாணை, அலுவலக உதவியாளர் காலியிடம் நிரப்புதல் உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளையும் துரிதமாக நிறைவேற்ற அமைச்சர் மற்றும் உயர் அலுவலர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்திற்கும் மேலாக வருகின்ற 03.08.2023 அன்று 60வது வைர விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில், வட்டக் கிளை மாநாடு, அதனைத் தொடர்ந்து மாவட்ட, மாநில மாநாடுகள் நடத்தி உறுப்பினர்களை ஒன்றுதிரட்டி அரை நூற்றாண்டுக் கோரிக்கையான வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் தனி ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற பெருங்கனவு மெய்ப்பட வேண்டும் என்ற உறுதியோடு நமது இலட்சிய பயணத்தை மேலும் உணர்வோடு தொடர்வோம்.... ■

# செயற்கை நுண்ணறிவு: ஆதாயமா, ஆபத்தா?

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) பல்வேறு துறைகளில் தடம் பதிக்க ஆரம்பித்திருக்கும் சூழலில் - ஒருபக்கம் பலர் அதைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினாலும், சிலர் அது மனிதகுலத்தின் எதிர்காலத்துக்கு மிகப் பெரும் தலைவலியாக மாறக்கூடும் என்று எச்சரித்து வருவதைப் பார்க்கிறோம்.

செயற்கை நுண்ணறிவின் மைல் கல்லாகக் கருதப்படும் 'சாட்ஜிபிடி' (ChatGPT), 2022இன் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு இந்தத் தொழில்நுட்பம் மனித மூளையை விஞ்சும் நுண்ணறிவாகவே பார்க்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், நுண்ணறிவின் இருப்பிடமான மூளை, மனதின் செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவின் தாக்கத்தைப் பார்ப்பது அவசியம்.

**வேறுபடும் புள்ளி:** செயற்கை நுண்ணறிவால் மனித அறிவுக்கு எட்டாத செயல்பாடுகளைக்கூடச் செய்யவைக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு வருவது உண்மைதான். ஆனால், மனித மூளைக்கே உரித்தான அனுதாப உணர்வு (Empathy), கருணை, அனுபவங்கள் மூலம் கற்றுக்கொண்டதை வைத்து சூழ்நிலைகளை அணுகும் சமயோசித புத்தி போன்றவற்றைச் செயற்கையாக உருவாக்குவது சாத்தியமில்லை என்றே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.


ஏனென்றால் செயற்கை நுண்ணறிவானது, ஏற்கெனவே வலைதளங்களில் இருக்கும் கணினி நிரல்கள், தரவுகளைத் திரட்டி அவற்றை ஒருங்கிணைப்பதன் அடிப்படையிலேயே கணித்துத் தீர்வுகளை முன்வைக்கிறது; அந்த வகையில், இது மனிதமூளையின் இயற்கையான சிந்திக்கும் செயல்பாட்டிலிருந்து வித்தியாசப்படுகிறது.

உதாரணத்துக்கு, மனநோய்க்கான அறிகுறிகளாக அரட்டைப்பெட்டியில் (Chatbot) உள்ளீடாகச் செலுத்தப்படும் தரவுகளின் அடிப்படையில், ஒருவரது மனநிலையில் ஏற்படும் மாற்றங்களைக் கணிக்க முடியும். ஒருவர் மனநலப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறாரா இல்லையா என்பதையும் எந்த விதமான மனநலப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார் என்பதையும் செயற்கை நுண்ணறிவு மூலம் அவருக்குத் தெரியாமலேயே கண்டறிய முடியும்.

குறிப்பாக, ஒருவரின் சமூக வலைதளப் பதிவுகளின் தரவுகளைக் கொண்டு அவர் மனஅழுத்தத்தில் உள்ளாரா, தற்கொலை செய்து கொள்ளும் மனநிலையில் இருக்கிறாரா என்பது போன்ற தகவல்களைக் கண்டறிய முடியும். மருத்துவ ஆவணத் தரவுகளின் அடிப்படையில் தனிநபரின் மருத்துவ சிகிச்சை முதல் சுகாதாரம் குறித்த தேசிய அளவிலான கொள்கை முடிவுகளை எடுப்பது வரை செயற்கை நுண்ணறிவு முக்கியப் பங்கு வகிக்கப் போகிறது என்பதை மறுக்க இயலாது.

**ஆபத்து அதிகம்:** நுண்ணறிவு, அறிவுத்திறன் உள்பட மூளையைப் பயன் படுத்திச் செய்ய வேண்டிய பல செயல்பாடு களுக்குச் செயற்கை நுண்ணறிவைச் சார்ந்து மனிதர்கள் இருக்க நேர்ந்தால், உபயோகிக்கப் படாத உடல் உறுப்புகள் சிறுத்துப்போவதுபோல மூளைச் சுருக்கமும் ஏற்பட்டு பலவிதமான நரம்பியல், மனநலப் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும். இன்று புழக்கத்திலிருக்கும் திறன்பேசி களின் பயன்பாட்டினால் ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் கொண்டே செயற்கை நுண்ணறிவினால் மூளை நரம்பியல், மனநலனில் ஏற்படப்போகும் எதிர்மறை விளைவுகளைப் பொதுமைப்படுத்திப் பார்க்க முடியும்.

ஒருபக்கம் தற்கொலையைத் தடுக்க உதவினாலும், இன்னொரு பக்கம் சமூக விரோதிகளின் கையில் அகப்படும் செயற்கை நுண்ணறிவால் போலியான தகவல்களைப் பரப்பி, ஒரு தனிநபரைத் தற்கொலைக்குத் தூண்டுவது முதல் கும்பல் மனப்பான்மையை (Mob attack) ஏற்படுத்தி பெரும் கலவரங்களையும் ஏற்படுத்த முடியும்.




குடும்ப நபர்களின் கைபேசி எண், பிறந்த நாள்கள் முதற்கொண்டு பக்கத்துத் தெருவுக்குச் செல்லும் வழியை அறிவது வரை திறன்பேசிகள் இல்லாமல் செயல்பட முடியாத நிலைக்கு நாம் வந்துவிட்டோம். முன் மூளையின் (Frontal lobe) செயல்பாடுகளான பேச்சாற்றல், பகுத்தறியும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், முடிவெடுத்தல், படைப்பாற்றல்; நடுமூளையின் (Parietal lobe) செயல்பாடுகளான தொடு உணர்வு, இசை, கணிதம், போக்குவரத்து வழிகளைக் கண்டறிதல் (Navigation); கீழ்மூளையின் (Temporal lobe) செயல்பாடுகளான உணர்ச்சி வயப்படுதல், நினைவுத்திறன் போன்ற மூளையின் பெரும்பலான செயல்பாடுகளைத் திறன்பேசிக்குத் தாரைவார்த்துக் கொடுத்ததன் விளைவைப் பள்ளிகளிலும் மனநல மருத்துவமனைகளிலும் வெளிப்படையாகப் பார்த்து வருகிறோம்.

இப்படியிருக்க.. இதிலும் பலமடங்கு அதிபுத்திசாலியான செயற்கை நுண்ணறிவு, மாணவர்களைக் கற்றல்திறன் குறைபாடு உள்ளவர்களாகவும், மொழியறிவு அற்றவர்களாகவும் மாற்றிவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. மனிதர்களை எளிதில் உணர்ச்சிவசப்பட வைத்து மனசாட்சியற்ற, குற்றவுணர்வற்ற சமூக விரோதிகளாகவும் மாற்ற வாய்ப்பிருப்பதாக ஆராய்ச்சியாளர்களில் ஒரு சாரார் கூறுகின்றனர்.

**கவலைதரும் போக்கு:** கரோனா பெருந்தொற்றுக்குப் பின், பள்ளி மாணவர்களின் கற்றல்திறன், கவனம், உணர்ச்சிகளை அடக்கும் திறன் போன்றவை பெருமளவில் பாதிக்கப்பட்டதற்கு முக்கியக் காரணம் திறன்பேசிகளின் அதீதப் பயன்பாடுதான். சாட்ஜிபிடி போன்ற செயற்கை நுண்ணறிவு அரட்டைப் பெட்டிகளின் பயன்பாடு மாணவர்களின் வாசித்தல், புரிந்துகொள்ளல், எழுதுதல் போன்ற திறன்களைப் பாதிப்பதுடன் ஆசிரியர்-மாணவர் உறவையும் பாதிக்கும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு இழப்பு ஏற்படும் என்பதே பலரின் கவலையாக இருக்கிறது.

ஆனால், 'நுண்ணறிவைப் பயன்படுத்த இயலாத மனித ஆற்றலை ஏற்கெனவே செயற்கை நுண்ணறிவு உருவாக்க ஆரம்பித்துவிட்டது' என்பது இன்னும் பரவலான கவனத்தைப் பெறவில்லை. எனினும், உள்ளீடு செய்யப்படும் தரவுகளின் அடிப்படையிலேயே செயற்கை நுண்ணறிவு மனிதர்களுக்குச் சேவையாற்ற முடியும். அந்த வகையில், அச்சுப் புத்தகங்களில் பதிவாகியிருக்கும் மனித குலத்தின் அறிவு அதற்கு ஆதாரமாகிறது. தகவல்களின் உண்மைத் தன்மையைச் சரிபார்த்துப் பகுத்தறிவதற்கான சாத்தியத்துடன்

இயங்கும் அச்சு ஊடகங்கள்வழி செயற்கை நுண்ணறிவின் சிக்கல்களை நாம் எதிர்கொள்ள முடியும்.

மன அமைதிக்காகப் பெரும்பாலானோர் கடவுளைத்தான் தேடுவார்கள். அந்தக் கடவுளைத் தேடுவதன் மூலம் கிடைக்கும் மன அமைதியை அல்லது கடவுளின் தன்மையையே செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருப்பது இதன் வீரியத் தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இதனால்தான் உலகளாவிய மதத் தலைவர்கள் சமீபத்தில் வாடிகனில் கூடி இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். செயற்கை நுண்ணறிவால் மனிதாபிமானத்தைப் பிரதிபலிக்க முடியாது என்றும் அதனால் இது அகதிகளின் உரிமைகளையும், பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கும் என்றும் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

வரைமுறைப்படுத்துதல் அவசியம்: ஆல்ஃபிரெட் நோபல், 'டைனமைட்' வெடி மருந்தை உலகுக்கு அறிமுகப்படுத்தும்போது அது மனிதகுலத்துக்குப் பேராபத்தை விளைவிக்கப் போகிறது என்பதை அறிந்திருக்கவில்லை. ஆனால், செயற்கை நுண்ணறிவின் ஞானத் தந்தையான ஜெஃப்ரி ஹின்டன், இதை சீக்கிரமே உணர்ந்துவிட்டதை அவரது அறிக்கை தெரிவிக்கிறது.

திறன்பேசிகளின் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக்கும், முறைகேடான பயன்பாட்டுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் மெல்லியதாக இருப்பதால்தான் பள்ளிக்கூடம் முதல் படுக்கையறைவரை ஏற்பட்டு வரும் ஆபத்துகளைச் சமாளிக்க முடியாமல் திணறி வருகிறோம்; இது செயற்கை நுண்ணறிவுக்கும் பொருந்தும்.

செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை வரைமுறைப்படுத்தாவிட்டால் மனித குலமும் மனித மனங்களும் பேராபத்தைச் சந்திக்கும் என உறுதியாகச் சொல்லலாம். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப நிபுணர்கள், தொழில் நிறுவனங்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், மனநல நிபுணர்கள், கல்வியாளர்கள், ஆட்சியாளர்கள் என அனைவரும் இணைந்துதான் இந்தத் தொழில்நுட்பப் பூனைக்கு மணி கட்ட வேண்டும்! ■



திருச்சிராப்பள்ளி மாவட்டம் புதிய TNROA சங்கக் கட்டடம் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த "நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்" மாண்புமிகு கே.என்.நேரு அவர்களுக்கு மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநில பொருளாளர் வெ.சோமசுந்தரம் மற்றும் திருச்சி மாவட்ட நிர்வாகிகள்

# டி.எம்.நாயர்: உழைப்பாளர்களின் உரிமைக் குரல்

பெயருக்குப் பின்னால் சாதிஅடையாளங்களை வெளிப்படுத்தும் பின்னொட்டுகள் கூடாது என்பதைத் திராவிட இயக்கம் தமது கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. என்றாலும், தமது முன்னோடிகளில் ஒருவரை அவ்வாறான பின்னொட்டைச் சொல்லியே அழைத்து வருகிறது என்பது வியப்பானதுதான். அந்த முன்னோடி, டி.எம்.நாயர் என்று அழைக்கப்படும் தரவத்து மாதவன் நாயர் (1868-1919).

**மருத்துவத் துறை முன்னோடி:** இங்கிலாந்து சென்று மருத்துவம் பயின்று, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மருத்துவப் பயிற்சி மேற்கொண்டு, மருத்துவத் துறை உயர் படிப்புகளுக்காக அன்றைய நடைமுறைப்படி கிரேக்க மொழியைப் பயின்றவர் டி.எம்.நாயர். சென்னை மாகாணத்தில் முதலாவதாக மருத்துவத் துறைக்கென 'ஆன்டிசெப்டிக்' இதழைத் தொடங்கி நடத்தி, மருத்துவத் தொழிலிலும் ஆராய்ச்சியிலும் முன்னோடியாக விளங்கியவர்.

போலி மருத்துவர்களைக் கண்காணிக்கவும் மருத்துவத் தொழிலை நெறிப்படுத்தவும் தனிச் சட்டம் இயற்றக் காரணமாக இருந்தவர். நீரிழிவு நோய் குறித்து 100 ஆண்டுகளுக்கு முன்பே தனிப் புத்தகம் எழுதியவரும்கூட.

சென்னை நகர்மன்ற உறுப்பினராகப் பொறுப்பு வகித்த காலகட்டத்தில், உள்ளாட்சித் துறையின் பொறுப்புகள் குறித்தும் அதிகாரங்களைக் குறித்தும் தீவிரமான விவாதங்களை முன்னெடுத்தவர். அவ்வாறு அவர் முன்னெடுத்த விவாதங்களின் எதிர்வினைகளால், மனம் நொந்து அவர் பதவி விலகவும் நேரிட்டது என்பது தனிக் கதை. உள்ளாட்சிகள் விதிக்கும் சேவைக் கட்டணங்களுக்கு வழிபாட்டுத் தலங்கள் விதிவிலக்கு அல்ல என்று அவர் வலியுறுத்தியதே இன்று நடைமுறையாய் இருக்கிறது.

ஆங்கிலத்தில் வெளியான அவரது முதல் புத்தகமே, உள்ளாட்சி நிர்வாகத்தைப் பற்றியதுதான். சென்னை சட்டக் கல்லூரியில் மாணவர்களிடம் உள்ளாட்சித் துறை குறித்து அவர் ஆற்றிய ஆறு விரிவுரைகளே முதன்முதலில் நூல்வடிவம் கண்டன.



**தொழிலாளர்களின் வேலை நேரம்**: வகுப்புரிமைக்கு முதன்முதலில் குரல் கொடுத்தவர்களில் ஒருவராக அறியப்படும் டி.எம்.நாயர், அதற்கு முன்பே தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுத்தவர் என்பது பொதுவாகப் பேசப்படுவதில்லை. சுயமரியாதை இயக்கத்தில் பெரியாருடன் இணைந்து செயல்பட்டவரான சிங்காரவேலரை நினைவுகூரும் தொழிற்சங்கவாதிகளும் கூடத் தொழிலாளர்களின் பணி நேரத்தைக் குறைக்கப் பெரும் பணியாற்றிய டி.எம்.நாயர் குறித்துப் பேசுவதில்லை. அவரது பங்களிப்புகள் குறித்த விவரங்கள் போதுமான அளவில் பொதுவெளியில் கிடைப்பதில்லை என்பதும்கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

1907-08ஆம் ஆண்டுகளில் ஆலைத் தொழிலாளர்கள் ஆணையத்தில் டி.எம்.நாயர் உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார். தொழிற்சாலைகளில் 17 மணி நேரம் வரையிலும் தொழிலாளர்கள் வேலைபார்க்க வேண்டிய சூழல் நிலவிய காலகட்டம் அது. ஐரோப்பிய நாடுகளில் அவருக்கிருந்த தொடர்புகளின் காரணமாக, லங்காஷயர் ஆதரவாளராகவே அப்போது அவர் அடையாளப்படுத்தப்பட்டார்.

இந்தியாவில் தொழிலாளர்கள் குறைவான கூலியில் அதிகமான நேரம் பணியாற்றுவதால் பிரிட்டன் தொழிற்சாலைகளைக் காட்டிலும் குறைவான செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது என்பதால், அதற்கு லங்காஷயரை மையமாகக் கொண்டு இயங்கிய பிரிட்டன் தொழிற்சாலைகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இந்தியத் தொழிற்சாலைகளோ, தொழிலாளர்களின் உடல், மனநலத்தைக் காட்டிலும் உள்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுத்தன.

ஓய்வின்றி உழைக்கும் மக்கள் அதன் காரணமாக எவ்வாறான உடல்நலக் கேடுகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது என்பதை ஒரு மருத்துவராகவும் உணர்ந்திருந்த டி.எம்.நாயர், தொழிலாளர்களின் பணி நேரம் குறைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். வைஸ்ராய் மிண்டோவுடனான அவரது சந்திப்பு பலனளிக்கவில்லை. அதையடுத்து, பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சியின் தலைவர் ஆர்தர் ஹெண்டர்சனைச் சந்தித்து அவரது உதவியையும் நாடினார்.

இந்தியாவின் செயலராக இருந்த மார்லியைத் தொடர்ந்து சந்தித்து தொழிலாளர்களின் அவலநிலையை அவரிடம் எடுத்துரைத்தார். இந்தியா முழுவதும் உள்ள தொழிலாளர்களின் வேலை நேரம் 12 மணி நேரமாகக் குறைக்கப்படுவதற்கு டி.எம்.நாயர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் முக்கியமானவை.

**முதல் மூன்று சட்டங்கள்:** 1881இலேயே இந்தியாவின் முதலாவது தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்பட்டு விட்டது. இருந்தாலும், அது சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துவதை முறைப்படுத்த மட்டுமே இயற்றப்பட்டது. 7 வயதுக்குக் குறைவான சிறுவர்களைப் பணியில் ஈடுபடுத்தக் கூடாது. 7 முதல் 12 வயது வரையுள்ள சிறுவர்களை 9 மணி நேரத்துக்கு அதிகமாக வேலை வாங்கக் கூடாது, சிறுவர்களுக்கு ஒவ்வொரு நாளும் வேலைக்கு இடையே ஒரு மணி நேரம் ஓய்வு அளிக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் முதலாவது தொழிற்சாலைச் சட்டத்தின் வழிகாட்டுதல்கள்.

1891இல் இயற்றப்பட்ட இரண்டாவது தொழிற்சாலைச் சட்டமானது சிறுவர்களோடு பெண்களின் நலனிலும் மிகச் சிறிய அளவுக்கு அக்கறை காட்டியது. சிறுவர்களின் வேலை நேரத்தை 9 மணி நேரத்திலிருந்து 7 மணி நேரமாகக் குறைத்த இச்சட்டம், பெண்களின் வேலை நேரத்தை 11 மணி நேரமாகக் குறைத்தது. என்றாலும் ஆண்களின் வேலை நேரம் குறித்து சட்டபூர்வமான வலியுறுத்தல்கள் எதையும் இச்சட்டம் செய்யவில்லை.

1911இல் இயற்றப்பட்ட தொழிற்சாலைச் சட்டத்தில்தான், முதன்முதலாகத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஆண்களின் வேலை நேரம் 12 மணி நேரத்துக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்று கண்டிப்புடன் தெரிவிக்கப்பட்டது. மேலும், 6 மணி நேர வேலைக்குப் பிறகு அரை மணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டார்கள்.


**நாயரின் பங்களிப்பு**: நவீன இந்திய வரலாற்று நூல்களில், இந்தியாவில் தொழிற்சாலைச் சட்டங்கள் இயற்றப்பட்ட வரலாற்றையும், தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடிய அரசியல் தலைவர்களைப் பற்றியும் தவறாமல் பேசப்படுகிறது. என்றாலும், இங்கிலாந்து வரை சென்று இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய டி.எம்.நாயரைப் பற்றி எந்தக் குறிப்புகளையும் பார்க்க முடிவதில்லை.

இந்தியாவில், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான முக்கிய மையமாக சென்னை மாநகரம் விளங்கியிருக்கிறது. தொழிற்சங்கங்கள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுவதற்கும் சென்னையில் நடந்த தொழிலாளர் போராட்டங்கள்தான் முக்கிய காரணம். அதே நேரத்தில், தமிழ்நாட்டின் தொழிலாளர் உரிமைப் போராட்ட வரலாற்றிலும்கூட டி.எம்.நாயர் நினைவுகூரப்படுவதில்லை.

எட்டு மணி நேர வேலையை உறுதி செய்ததற்காக இந்தியாவிலேயே முதன்முதலில் மே தினம் கொண்டாடப்பட்டது சென்னை கடற்கரையில். அதற்கு முன்பே, அதன் முதற்படியாக இந்தியத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 12 மணி நேரமாகக் குறைப்பதற்குப் பெருமுயற்சிகள் எடுத்த நாயரை நாம் நினைவுகூர மறந்துவிட்டோம். திராவிட இயக்கத்தின் தலைவராக மட்டுமில்லை, தொழிலாளர்களின் தலைவராகவும் நினைவுகூரப்பட வேண்டியவர் அவர்.

**ஜூலை 17: டி.எம்.நாயர் நினைவு நாள்**

# தேசியக்கவி ரவீந்திரநாத் தாகூர்



**1861**-ஆம் ஆண்டு, கொல்கத்தாவில் தேவேந்திரநாத தாகூருக்கும் சாரதாதேவி அம்மையாருக்கும் 14-ஆவது குழந்தையாக ரவீந்திரநாத் தாகூர் பிறந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வங்காளத்தில் சிறப்பாக செயல்பட்ட பிரம்ம சமாஜத்தின் தலைமைப் பதவியை அலங்கரித்தவர் தேவேந்திரநாத் தாகூர். ஆன்மிக சிந்தனைகளில் ஆழ்ந்த மனமும், சமூக சேவையும், மீதமுள்ள நேரத்தில் தீர்த்தாடனங்களும் பிறவும் நடத்திய தேவேந்திரநாத தாகூரை மக்கள் அன்புடன் மஹரிஷி தேவேந்திரநாத தாகூர் என அழைத்தனர். தாகூரின் குடும்பத்தில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்கள் இருந்தனர். ரவீந்திரநாத தாகூரின் மூத்த சகோதரர் த்விஜேந்திரநாதர் தத்துவ சிந்தனை செய்பவரும், கவியுமாக இருந்தார். மற்றொரு சகோதரரான சத்யேந்திரநாதர் யூரோப்பியன் பாரதீய சிவில் சர்வீஸில் நியமிக்கப்பட்ட முதல் பாரதக் குடிமகனாவார். மற்றொரு சகோதரரான ஜ்யோதீந்திரநாதன் சங்கீத வித்துவானும், இசையமைப்பாளரும், நாடக ஆசிரியரும் ஆவார். ரவீந்திரநாத தாகூருக்கு இவரே சிறந்த முன்னுதாரணமாக இருந்தார். சகோதரி சொர்ண குமாரி புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார்.

ஓரியண்டல் செமினார் ஸ்கூலில் தாகூர் ஆரம்பக்கல்வி பயின்றார். ஆனால், நடைமுறை மரபுக்கேற்ற கல்வி கிடைக்காத காரணத்தால் அவர் வீட்டிலேயே தங்கி, பல்வேறு ஆசிரியர்களிடம் படிக்க ஆரம்பித்தார். இலக்கியம் முதல் வேறு பல விஷயங்களை அவருக்கு அவரது சகோதரர்களே கற்பித்தனர்.

திறந்த ஜன்னலுக்கு அருகில் அமர்ந்து இயற்கையை ரசித்தும், வீட்டுப் பணியாளர்களிடமிருந்து ராமாயண மஹாபாரதக் கதைகள் கேட்டும், அச்சிறு குழந்தை மனம் மென்மையான மலராக மலர்ந்தது. எட்டாம் வயதில் கவிதை எழுதி பிரசுரிக்க ஆரம்பித்த தாகூர் ஒப்புவமையற்ற கவிஞராகத் திகழ்ந்தார். 1875-ஆம் ஆண்டு பிப்ரவரி 11-ஆம் தேதி ஒரு ஹிந்து விழாவில் அக்குழந்தைக் கவிஞர் பின்வருமாறு பாடினார்.

'இமயமலைத் தொடரிலுள்ள
பாறையில் அமர்ந்திருக்கும்
முனி வியாஸன்
மணிவீணையைக் கைகளில் ஏந்தி
அதன் கம்பிகளை மீட்டி
அந்த மஹான் பாடும் வேளையில்
மலையும், காடும், காற்றும்
மெல்ல அசைகின்றன."

தந்தை தேவேந்திராநாதர் அடிக்கடி இமாலயத்திற்குச் சென்று வருவதுண்டு. ஒருமுறை அவர் 11 வயதான தன் மகனையும் அழைத்துச் சென்றார். பயண வேளையில் சம்ஸ்கிருதம் மற்றும் ஆங்கில மொழிகளைத் தந்தையிடமிருந்த கற்றும், இயற்கை அழகை

ரசித்தும், சுதந்திரத்தின் தூய காற்றை நுகர்ந்தும் திரும்பிய ரவீந்திரநாத தாகூர் புதிய மனிதனாக மாறியிருந்தார். இப்பயணத்தைப் பற்றி 'ஜீவல் ஸ்ம்ருதி" என்ற பெயரில் ஒரு கட்டுரையை பின்னர் அவர் எழுதினார். 17-ஆவது வயதில் சட்டப் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றாலும், அவரால் அங்கு படிப்பை நிறைவு செய்ய முடியவில்லை. பாரதம் திரும்பிய பிறகு தாகூர் தனது பெரும்பாலான நேரத்தை இலக்கிய படைப்பிற்கும், புத்தகங்களை வாசிப்பதற்குமாகச் செலவிட்டார்.

வால்மீகி பிரதியை, சந்தியா கீதம், ப்ரபாத சங்கீதம் போன்றவற்றை அவர் இக்காலத்தில் இயற்றினார். இவற்றில் சந்தியா கீதத்தைப் படித்த பங்கிம் சந்திர சட்டர்ஜி (வந்தே மாதரம் பாடலை இயற்றியவர்) தாகூரை வாயாரப் புகழ்ந்தார்.

1883-ஆம் ஆண்டு அவர் மிருணாளினி தேவியை மணம் புரிந்தார். ஆன்மிக சிந்தனைகளில் எப்போதும் மூழ்கியிருந்த அவரது தந்தை தியானம் புரிவதற்காக ஓரிடத்தை வாங்கி, அதற்கு சாந்தி நிகேதன் என்ற பெயரிட்டிருந்தார். 1863-ஆம் ஆண்டு தந்தை அங்கே ஒரு ஆசிரமத்தை நிறுவி இருந்தார். இங்கே மரங்களின் நிழலில் உபநிஷதக் கதைகளை நினைவூட்டும் வகையில் வகுப்புகள் நடைபெற்றன. பிரிட்டிஷ்காரர்கள் கொண்டு வந்த நவீன கல்விமுறையை விட பழமையான கல்விமுறையை மீண்டும் கொண்டு வருவது அதிக பயனைத் தரும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

இக்காலகட்டத்தில், காவியங்களை இயற்றுவதில் மூழ்கியிருந்த தாகூரை மக்கள் 'மஹாகவி" என்று அழைக்க ஆரம்பித்திருந்தனர்.

1905-ஆம் ஆண்டில் அக்கால வைஸ்ராய் கர்ஸன் பிரபு ஆள்வதற்கு வசதியாக வங்காளத்தை இரண்டாகப் பிரிக்கத் தீர்மானித்தார். வெளிநாட்டார் நம்மை ஆள்வதை எதிர்த்த வங்காள மக்களைப் பிரித்தாள நினைக்கும் அரசின் முயற்சியைப் புரிந்து கொண்ட மக்கள் பல்வேறு முறையில் தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர். கொல்கத்தாவிற்கு வந்த தாகூர், பல்வேறு தேசியகீதங்களை இயற்றியதுடன், எதிர்ப்புக் கூட்டங்களில் பங்கெடுக்கவும் செய்தார். வங்காள மக்களின் பிரிக்க முடியாத ஒற்றுமையை எடுத்துக் காட்டும் விதமாக 'ரஷாபந்தன்" சடங்கை நடத்துமாறு அவர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார். சகோதர உணர்வை வெளிப்படுத்தும் வகையில் வங்காளிகள் அனைவரும் தங்களுக்குள் ராக்கி அணிவித்தனர். தாகூர் அந்த மாபெரும் பேரணியை முன்னின்று நடத்தினார். மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் தங்களுடைய தீர்மானத்திலிருந்து பின்வாங்கியது.

1911-ஆம் ஆண்டு இந்த மஹாகவி 'பாரதவிதாதா" என்ற பாடலை இயற்றினார். பின்னர் பாரதத்தின் தேசியகீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 'ஜன கன மன" என்ற இந்த பாடல் இதே வருடம் டிசம்பர் 27-ஆம் தேதி கொல்கத்தாவில் நடந்த இந்தியன் நேஷனல் காங்கிரஸின் வருட மாநாட்டில் முதன்முதலாக பாடப்பட்டது.

உலகில் வேறு எங்குமே ஒரு கவியின் இரண்டு கவிதைகள் இரு நாடுகளில் தேசியகீதமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், தாகூரின் 'ஆமார் ஸோணார் பாங்களா" (என்னுடைய தங்கமான வங்காளம்) என்ற அழகிய படைப்பை பங்களாதேஷ் தங்களின் தேசியகீதமாக இசைக்கிறது.

1909-இல் தாகூர் 'கீதாஞ்சலி"-யை எழுத ஆரம்பித்தார். சில வருடங்களுக்குப் பிறகு அவர் கீதாஞ்சலியிலிருந்து சில கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கவிதை வரிகளால் கவரப்பட்ட வில்லியம் ரோதென்ஸ்டீன் என்ற கலைஞனை லண்டனில் அவர் சந்தித்தார். நோபெல் பரிசுபெற்ற வில்லியம் பட்லர் யேட்லினுக்கும், பிற ஆங்கில கவிகளுக்கும் கீதாஞ்சலியைக் கொடுத்தார். 1912 செப்டம்பரில் லண்டனில் உள்ள இந்தியா சொஸைட்டி லிமிடெட் பதிப்பில் கீதாஞ்சலியை பிரசுரித்த போது யேட்ஸ் கீதாஞ்சலிக்கு முகவுரை எழுதினார். 1913-ஆம் ஆண்டில் இக்கவிதைத் தொகுப்பிற்கு இலக்கியத்திற்கான

நோபெல் பரிசு கிடைத்தது. உலகப் பிரசித்தி பெற்ற இந்த பரிசைப் பெற்ற முதல் வெளிநாட்டவராக (அதுவரை ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களுக்கே இப்பரிசு வழங்கப்பட்டு வந்தது) தாகூர் திகழ்ந்தார்.

இதுவே நான் செய்யும்
பிரார்த்தனை இறைவா!
நெஞ்சில் முளைக்கும்
தாழ்ச்சி எண்ணத்தின்
வேரை நோக்கி அடி!
ஓங்கி அடி
இன்ப துன்பத்தை
எளிதில் தாங்கிட
எனக்குப் பொறுமை அளித்திடு!
நற்பலன்கள் விளையும் பணிகளை
நான் பாசமுடன் புரிய
நல்கிடு உறுதி!
வறியோரை என்றும்
மறவாதிருக்கும்
நெறியிலா மூர்க்கர் முன்பாக
முழங்கால் மடக்கி என்றும்
வணங்காதிருக்கவும் எனக்கு
வைராக்கியம் தந்திடு!
தினச் சச்சரவிலிருந்து விடுபட்டு
மனம் அப்பால் சென்று
எனது உள்ளம் உயர்ந்து சிந்திக்க
மனத் தெளிவைக் தந்திடு!
அத்துடன் எனது ஆற்றல்
முழுவதையும் ஒப்படைத்து
உன் ஆசைப் பணிக்கு
பாசமோடு உழைத்திட எனக்கு
சக்தி அளித்திடு!

கீதாஞ்சலியில் தாகூர் செய்திடும் பிரார்த்தனை இது.

நோபெல் பரிசுபெற்ற அதே வருடத்தில் கொல்கத்தா பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் விருது நல்கி மரியாதை செய்தது. தொடர்ந்து, ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் முதல் பல உலக நாடுகளும் மஹாகவியை வாழ்த்தவும், விருதுகள் வழங்கி மரியாதை செய்யவும் செய்தன. 1915-ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தாகூருக்கு 'சர்" பட்டம் அளித்து கௌரவித்தார். 1919-இல் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை மஹாகவியின் மனதை மிகவும் வாட்டியது. அரசுக்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தாகூர், அரசு தனக்களித்த சர் பட்டத்தைத் துறப்பதாக அன்றைய வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். 'ஸ்டேட்ஸ்மேன்" என்ற பத்திரிக்கை அக்கடிதத்தைப் பிரசுரித்தது. இக்கடிதத்தை பாரதக் குடிமகனாகப் பிறந்த ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். அதில் வரும் சில வரிகள் பின்வருமாறு.

**உலகில் வேறு எங்குமே ஒரு கவியின் இரண்டு கவிதைகள் இரு நாடுகளில் தேசியகீதமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், தாகூரின் 'ஆமார் ஸோணார் பாங்களா" (என்னுடைய தங்கமான வங்காளம்) என்ற அழகிய படைப்பை பங்களாதேஷ் தங்களின் தேசியகீதமாக இசைக்கிறது.**

'பயத்தால் முகம் வெளிறி நிற்கும் லட்சக்கணக்கான என் சகோதரர்களின் எதிர்ப்பை எடுத்தியம்புவது ஒன்றே என்னால் என் நாட்டிற்காகச் செய்யக் கூடியது. அதன் பின் விளைவுகளை எல்லாம் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ஒரு நாளும் ஏற்றுக் கொள்ள முடியாத இந்த அடக்குமுறையின் பின்னணியில் உங்களுடைய மரியாதை சின்னங்கள் எல்லாம் என்னைப் பொறுத்த வரை அவமானத்தின் ஒளிசிந்தும் முத்திரைகளாகும். மனிதகுலத்திற்குப் பொருந்தாத ரீதியில் என் தேசமக்களை அவமதித்த நீங்கள் எனக்குத் தந்த எல்லா மரியாதை சின்னங்களும் அவமான சின்னங்களாக மாறியிருக்கின்றன. இக்காரணங்களால் உங்களுக்கு முன் பதவி வகித்தவர் எனக்களித்த சர் பட்டத்தை அவர்மீது எனக்குள்ள மரியாதை சிறிதளவும் குறையாமல் நான் துறக்கிறேன்." (1919- மே 30)

பாரத சுதந்திரப் போராட்டத்தில் தாகூர் பங்கெடுத்திருந்தார். நவீன பாரதத்தின் சிற்பிகளில் ஒருவராக தாகூர் கருதப்படுகிறார். காந்தி தாகூரை 'குருதேவ்" என அழைத்தார். கல்வி முறை குறித்து தனது வேறுபட்ட கருத்துக்களை தாகூர் 'விச்வபாரதி" என்ற பல்கலைக்கழகத்தில் வெளிப்படுத்தினார். நோபெல் பரிசின் மூலம் கிடைத்த பணத்தையும், தான் எழுதிய புத்தகங்களை விற்றதால் கிடைத்த ராயல்டியையும் முழுமையாக இந்த பல்கலைக்கழகத்திற்கு அளித்தார்.

வெகுநாட்கள் கஷ்டப்பட்ட அவர் 1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் தேதி தான் வளர்ந்த அதே மாளிகையில் இவ்வுலகைத் துறந்தார். இந்த வரலாற்று எழுத்தாளருக்கு அஞ்சலி செலுத்தும்விதமாக பல நாடுகளும் அவருடைய சிலைகளை நிறுவின. ஆண்டு விழாக்கள் நடத்தின.

ஹங்கேரியில் பாலட்டனில் அழகிய பூங்கா ஒன்றில் தாகூரின் முழுமையான சிற்பம் கம்பீரமாக நிற்கிறது.

தனது இறுதி நாட்களில் மஹாகவி 'நான் பாரதத்தில் மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டே இருப்பேன். ஏழ்மையும், கஷ்டமும், பாக்கியமின்மையும் இருந்தாலும் பாரதத்தை நான் உளமார நேசிக்கிறேன்" என்றார். தேசப்பற்று ததும்பும் அம்மஹாகவியை நாம் வணங்குவோம். ■

# தமிழரின் பண்பாட்டை பறைசாற்றும் கீழடி

மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் இந்திய தொல்லியல் துறை மேற்கொண்ட முதல் இரண்டு அகழாய்வுகள் தொடர்பான ஆய்வறிக்கையை அமர்நாத் ராமகிருஷ்ணன் சமர்ப்பித்துள்ளார்.




மதுரையில் இருந்து 13 கி.மீ. தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடி என்ற தொல்லியில் தளத்தை 2014ஆம் ஆண்டுவாக்கில் இந்தியத் தொல்லியல் தறையின் கண்காணிப்பாளராக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணன் கண்டறிந்தார். இதற்குப் பிறகு இந்த இடத்தில் 2014-15, 2015-16 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அவரது தலைமையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பிறகு ஒருமுறை இந்தியத் தொல்லியல் துறையும் அதற்குப் பின்பு மாநிலத் தொல்லியல் துறையும் அங்கு அகழாய்வுகளை நடத்தின.

இந்தியத் தொல்லியல் துறை நடத்திய முதல் இரண்டு அகழாய்வுகளின் ஆய்வறிக்கை தற்போது அமர்நாத் ராமகிருஷ்ணனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கை, கீழடி தொல்லியல் தளத்தின் காலகட்டம், அங்கு நிலவிய கலாச்சாரம், அங்கு வாழ்ந்த மக்கள் விவசாயம் செய்த பயிர்கள், அவர்கள் வளர்த்த விலங்குகள், அந்த இடம் எப்படி ஒரு நகர நாகரீகத்தை நோக்கி நகர்ந்திருக்கக்கூடும் என்பது போன்ற கேள்விகளுக்கான ஆரம்பகட்ட விடைகளை அளிப்பதாக இந்த ஆய்வறிக்கை உள்ளது.

கீழடியில் இந்தியத் தொல்லியில் துறை மேற்கொண்ட இரண்டு அகழாய்வுகளிலும்



**இங்கு கிடைத்த பானை ஓடுகளில் இருக்கும் பிராகிருத பெயர்கள், கீழடிக்கும் இலங்கைக்கும் இடையில் வணிகத் தொடர்பு இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. மதிப்புமிக்க கற்களால் ஆன மணிகள், தந்தத்தால் ஆன பொருட்கள், தாமிரப் பொருட்கள், முத்து போன்றவை இங்கு கிடைத்திருப்பதை வைத்துப்பார்க்கும் போது இந்திய நிலப்பரப்பின் பிற பகுதிகளுடனும் உலகின் பிற பகுதிகளுடனும் கீழடிக்கு இருந்த தொடர்பு தெரிய வருகிறது.**

கிடைத்த பொருள்களை வைத்துப் பார்க்கும் போது இங்கே மூன்று பண்பாட்டு காலகட்டம் நிலவியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

இதில் முதலாவது காலகட்டம் கி.மு.எட்டாம் நூற்றாண்டிலிருந்து கி.மு.ஐந்தாம் நூற்றாண்டுவரை நிலவியிருக்க வேண்டும். இந்த காலகட்டத்தில்தான் மக்கள் இங்கே வாழத் துவங்கியிருக்க வேண்டும். இதற்கான தரவுகள் 2 மீட்டர் ஆழத்தில் உள்ள மண் அடுக்கில் கிடைத்திருக்கின்றன. இந்த காலகட்டத்தில், கீழடியில் எளிதில் மக்கிப் போகக்கூடிய (செங்கல் அல்லாத மரம் போன்ற) பொருட்களால் கட்டுமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இரும்புப் பொருட்கள், கறுப்பு-சிவப்பு மண்பாண்டங்கள், கிறுக்கல்களைக் கொண்ட பானை ஓடுகளும் இந்த காலகட்டத்தைச் சேர்ந்த மண் அடுக்கில் கிடைத்திருக்கின்றன.

இடைக்கற்காலத்தைச் சேர்ந்த நிறைய கற்கருவிகள் கிடைத்திருக்கின்றன. புதிய கற்காலத்தைச் சேர்ந்த தீட்டப்பட்ட கற்கருவிகளும் கிடைத்திருக்கின்றன. இருந்தபோதும் கீழடி இடைக்காலத்தையோ, புதிய கற்காலத்தையோ சேர்ந்த இடமாகக் கொள்ள முடியாது. இந்தக் கற்கருவிகள் கிடைப்பதை வைத்துப் பார்க்கும்போது, கீழடி வளரத் தொடங்கியபோது முந்தைய காலத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சி இருந்திருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே கீழடி இரும்புக் காலத்தில் வளரத் தொடங்கியிருக்கலாம் என்றாலும் கூட, தொடர்ந்து இந்தத் திசையில் ஆய்வுகளை நடத்த வேண்டும் என்கிறார் அமர்நாத் ராமகிருஷ்ணன்.

கீழடியின் இரண்டாவது காலகட்டம் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.மு.முதலாம் நூற்றாண்டின் முடிவு வரை இருந்திருக்கலாம். இதுதான் கீழடி, ஒரு முதிர்ந்த வாழிடப் பகுதியாக இருந்த காலகட்டம், இந்த காலகட்டத்தில்தான், கீழடியில் பெரும் வளர்ச்சி இருந்திருக்கிறது. பெரிய மற்றும் சிறிய அளவிலான செங்கல் கட்டுமானங்கள் இந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இங்கே கிடைத்த செங்கற்களாலான மேடைகள், சிக்கலான செங்கல் கட்டுமானங்கள், இரட்டைச்சுவர்களைக் கொண்ட உலைகள் ஆகியவை இந்த காலகட்டத்தைச் சேர்ந்தவை.

தானியங்களை சேகரித்து வைக்கக்கூடிய, அலங்கரிக்கப்பட்ட ஜாடிகள், சுடு மண் குழாய்கள், சுடுமண் உறைக் கிணறுகளும் இந்த காலகட்டத்தைச் சேர்ந்த அடுக்கில் கிடைத்திருக்கின்றன. உயர்ந்த ரகமுள்ள கறுப்பு - சிவப்பு கலங்கள், சிவப்பு நிறம் பூசப்பட்ட பொருட்கள், வெள்ளை நிறம் பூசப்பட்ட கலங்கள், தமிழ் பிராமி எழுத்துக்களை கொண்ட பானை ஓடுகள், கிறுக்கல்களைக் கொண்ட பானை ஓடுகள் ஆகியவை இந்த காலகட்டத்தைச் சேர்ந்த மண் அடுக்கில் கிடைத்திருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் சேர்த்து வைத்துப் பார்க்கும் போது இந்த காலகட்டத்தில் கீழடி நகரப் பண்புகளைக் கொண்ட மிக முக்கியமான இடமாக இருந்திருக்க வேண்டும். இந்தக் கோணத்தில் பார்க்கும் போது, கீழடி மதுரைக்கு அருகில் இருப்பதும், வரலாற்றுக் கால துறைமுகமான ஆலங்குளம் செல்லும் வழியில் இருப்பதும் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாகக் குறிப்பிடுகிறார் அமர்நாத் ராமகிருஷ்ணன்.

இங்கு கிடைத்த பானை ஓடுகளில் இருக்கும் பிராகிருத பெயர்கள், கீழடிக்கும் இலங்கைக்கும் இடையில் வணிகத் தொடர்பு இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. மதிப்புமிக்க கற்களால் ஆன மணிகள், தந்தத்தால் ஆன பொருட்கள், தாமிரப் பொருட்கள், முத்து போன்றவை இங்கு கிடைத்திருப்பதை வைத்துப்பார்க்கும் போது இந்திய நிலப்பரப்பின் பிற பகுதிகளுடனும் உலகின் பிற பகுதி களுடனும் கீழடிக்கு இருந்த தொடர்பு தெரிய வருகிறது.

ஆனால் மிக முக்கியமாகக் கவனிக்கத் தக்கது இங்கு கிடைத்த கட்டடத் தொகுதிகள் தான். தமிழ்நாட்டில் நடந்த அகழாய்வுகளில் வரலாற்று துவக்க காலத்தைச் சேர்ந்த கட்டடத் தொகுதிகள் மிக அரிதாகவே கிடைத்திருக் கின்றன. அரிக்கமேடு, காவிரிப்பட்டனம், கொற்கை போன்ற ஒரு சில இடங்களைத் தவிர வேறு எங்கும் இந்த காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடத் தொகுதிகள் கிடைத்ததில்லை. இந்த பின்னணியில்தான் கீழடியில் கிடைத்த கட்டடத் தொகுதிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த இரண்டு அகழாய்வுகளிலும் கிடைத்த கட்டடத் தொகுதிகள் மிகப்பெரிய கட்டடத் தொகுதிகளின் ஒரு பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதனை ஒட்டி மேலதிக ஆய்வுகள் இந்தியத் தொல்லியல் துறையால் செய்யப்படாத நிலையில், இந்த கட்டடத் தொகுதிகள் எவ்வளவு பெரியவை, விரிவானவை என்பதை அறிய முடியவில்லை.

இங்கு தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் கீழடியின் கலாச்சார வளர்ச்சியை மட்டுமல்லாமல், வைகைச்



சமவெளி மற்றும் தமிழ்நாட்டின் வரலாற்று துவக்க காலம் எப்படியிருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம் என்கிறார் அமர்நாத் ராமகிருஷ்ணன்.

கீழடியின் மூன்றாவது காலகட்டம் கி.மு.ஒன்றாம் நூற்றாண்டின் முடிவிலிருந்து கி.பி.மூன்றாம் நூற்றாண்டையும் தாண்டிச் செல்கிறது. இந்த இரு அகழாய்விலும் இங்கு கிடைத்த காசுகள், அதற்கு முன்பாக இங்கு கிடைத்த ராஜராஜன் காலத்துக் காசுகள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது, இந்த மூன்றாவது காலகட்டம் பத்தாம் நூற்றாண்டு வரை நீண்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. 10 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, இங்கு மக்கள் வாழ்வது குறைய ஆரம்பித்தது. பிறகு இந்த இடம் கைவிடப்பட்டது. ஆகவே, கீழடியின் காலகட்டம் என்பது கி.மு. எட்டாம் நூற்றாண்டில் துவங்கி கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை நீண்டிருக்கிறது என்பதை இந்த ஆய்வறிக்கை உறுதிசெய்கிறது.

கீழடியில் வாழ்ந்த மக்கள் என்ன உணவை உண்டார்கள், எந்த விலங்குகளை வளர்த்தார்கள், இங்கு கிடைத்த எழுத்துகள் என்ன சொல்கின்றன என்பதை பற்றியும் அந்த அறிக்கையில் விரிவாக குறிப்பிடப்பட் டிருக்கிறது.

**- இரா.மங்களபாண்டியன்**

மாநிலத் துணைத்தலைவர்

ABSTRACT

Public Services - Transfer of Government servants - Once in three years - Exemption to Goverment servants who are the caregiver of differently abled person Onders Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (8) DEPARTMENT**

G.0(M)No.107 Dated: 03.09.2020

சார்வதி, ஆவணி - 18,

திருவள்ளுவர் ஆண்டு 2051

Read :

1. G.O.(Ms) No.10, Personnel and Administrative Reforms (Per8) Department, dated 07.01.1904.
2. Letter No.15210/94-1, Personnel and Administrative Reforms (Per 3) Department, dated 29.08.1994.
3. Office Memorandum F.No.42011/3/2014-Eatt. (Res), Department of Personnel and Training, Government of India, dated 08.10.2018

ORDER:

In the Government Order first read above, the Government have laid down a transfer policy wherein detailed instructions were issued for making transfer of Government servants in Groups A, B and C. In continuation of the above order, the Government have further directed in the reference second read above, that the Government Servants who are having mentally retarded or differently abled children can make a request for his transfer before the completion of 3 years period as mandated in the general transfer policy. The same factor shall also be considered as a valid reason for his retention in the same station up to 5 years.

2. The Department of Personnel and Training, Government of India in its Office Memorandum third read above, have issued instructions exempting a Government employee who is a caregiver of dependent daughter / son / parents/spouse / brother sister with Specified Disability, as certified by the certifying authority as a Person with Benchmark Disability as defined under Section 2) of the Rights of Persons with Disabilities Act, 2016 from the routine exercise of transfer/rotational transfer subject to the administrative constraints.

3. After careful consideration, the Government direct that a government employee who is a caregiver of dependent daughter/son/parents/spouse/ brother/sister with Specified Disability, as certified by the certifying authority as a Person with Benchmark Disability as defined under Section 20) of the Rights of Persons with Disabilities Act, 2016 may be exempted from the routine exercise of transfer, subject to the administrative constraints, during the transfer period namely, between the 1st April and the 31st May, every year. This exemption is, however subject to the following conditions:-

(i) A Government servant must be a caregiver of differently abled dependent such as daughter / son / parents / spouse / brother / sister.

(ii) A Government servant who is a caregiver of differently abled dependent should furnish a certificate, certified by the certifying authority that the dependent is a Person with Benchmark Disability as defined under Section 2(r) of the Rights of Persons with Disabilities Act, 2016.

4. The Government also directs to follow the instructions issued in the Government letter second read above while considering the Government Servants who are having mentally ill or differently abled children for transfer.

(BY ORDER OF THE GOVERNOR)

S. SWARNA,
SECRETARY TO GOVERNMENT.

## வைரவிழா ஆண்டு அமைப்பு தினம்

வைரவிழா ஆண்டு அமைப்பு தினமான 3.8.2023 அன்று அனைத்து மாவட்ட மற்றும் வட்டத் தலைநகரில் சங்கக்கொடி ஏற்றி ஊழியர் சந்திப்பு நடத்திட வேண்டுமாய் மாநில மைத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சுருக்கம்

வருவரய் மற்றும் பேட்ர் மேலாண்மைத் துறை - முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் - வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்றன அரசு பணிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்தல் - வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசு முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழுங்குவது தொடர்பான அரசின் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய் நிருவாக அலகு,ஆநி,3(2) பிரிவு

அரசாணை (நிலை) எண். 296

நாள்: 19.06.2023,
சோபகிருது வருடம், ஆனி 4,
திருவள்ளுவர் ஆண்டு 2054,
படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வித் (ஜே2) துறை, நாள்: 16.04.2010
2. அரசு கடிதம் (நிலை) எண்.315, உயர்கல்வித் (ஜே2) துறை, நாள்: 13.11.2017
3. அரசாணை (நிலை) எண்.122 மணிதனை மேலாண்மைத் (கே2) துறை, நாள் 02.112021
4. அரசு கடித எண்.4745/வநி.3(2)/2022-3, வருவாய் மற்றும் மேலாண்மைத்துறை, நாள் 17.05.2022 மற்றும் 14.02.2023.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித ந.க.எண்.5(3)/01/329/2021, நாள் 21.09.2022 மற்றும் 13.03.2023,

**ஆணை:-**

மனித வள மேலாண்மைத்துறையின் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை தொடர்பான உரையின்போது, மாண்புமிகு அமைச்சர் (நிதி, மனிதவள மேலாண்மை) அவர்களால், வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சட்டமன்ற பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

i, கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்.

ii. முதல் தலைமுறைப் பட்டதாரிகள்.

iii. தமிழக அரசுப் பள்ளிகள் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள்,

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2010-2011-ஆம் கல்வியாண்டு முதல் இதுவரை பட்டதரிகளே இல்லாத குடும்பத்திலிருந்து ஒற்றைச்சாளர் முறையில் தொழிற்கல்வி பயில தேர்வுபெற்ற மாணவர்களுக்கு சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும், அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் (Tuition fee) முழுவதையும் சில நிபந்தனைகளுடன் அரசே ஏற்று ஆணையிட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் வேலை வாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகள். கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் மற்றும் தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்காக இவ்வரசாணை வெளியிடப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட அரசாணையின் அடிப்படையில் முன்னுரிமை பெற்றுள்ள பிரிவினராக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொள்வதற்கும், முன்னுரிமை முறை பின்பற்றப்படும் பணியாளர் தெரிவுகளுக்கு விண்ணப்பிக்கும் பொருட்டும். வேலைவாய்ப்பில் முன்னுரிமை சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும் முதல் தலைமுறை பட்டதாரி என்பதற்கான சான்றிதழ் வழங்கிடும் வகையில் சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அலுவலர்களுக்கு தேவையான ஆணைகள் / அறிவுறுத்தல்களை வழங்குமாறு மனிதவள மேலாண்மைத்துறை கேட்டுக் கொண்டது.

4. மேலே ஐந்தாவாதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் குறித்த அரசின் வழிகாட்டுதல்கள் மற்றும் அரசினால் பரிந்துரைக்கப்பட்ட குறிப்புரையின்படி அரசாணை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

5. மனித வள மேலாண்மைத்துறை மற்றும் உயர்கல்வித்துறையின் ஆய்வுரைகளையும், கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையரின் குறிப்புரையையும் அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, அரசாணை (நிலை) எண்.122. மனித வள மேலாண்மைத்துறை, நாள் 02.11.2021-இன்படி வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்குவது தொடர்பான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பில் கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் காணும் ஆணைக்கிணங்க, தக்க நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்குமாறும் மற்றும் வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்குவது தொடர்பான புதிய இணைய தொகுப்பு (Onine Module) உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்தி.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,

சேப்பாக்கம், சென்னை-5.

இணைப்பு

அரசாணை (நிலை) எண்.200, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி3(2)] துறை,
நாள்: 19.00.2023

வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படும் அரசு பணியிடங்களில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்குவது தொடர்பான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்

1. ஒரு குடும்பத்தில் கல்விக் கட்டண சலுகையினை பயன்படுத்தி முதலில் பட்டப்படிப்பில் சேருபவரை X என்றும் அதே குடும்பத்தில் கல்வி கட்டண சலுகை இல்லாமல் இரண்டாவதாக பட்டப்படிப்பில் சேருபவரை Y என்றும் கொள்ளலாம்.

2. கல்விக் கட்டண சலுகையினை பயன்படுத்தி X என்பவர் பட்டப்படிப்பில் சேர்ந்து அவர் பட்டப்படிப்பினை முடிக்கவில்லை. அடுத்த நபர் Y-க்கு கல்விக் கட்டண சலுகை இல்லை என்றாலும் அவர் முதலில் பட்டப்படிப்பினை முடித்துவிடுகிறார் எனில், Y என்பவருக்கு First Graduate Certificate வழங்கி வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கலாம்.

3. X முதலில் கட்டணச் சலுகை பெற்று பட்டப்படிப்பில் சேர்ந்து Y-க்கு பின்னர் பட்டதாரி ஆகிறார் என்றால், First Graduate Certificate Y என்பவருக்கு வழங்கலாம்.

4. X முதலில் கல்விக்கட்டண சலுகையினை பயன்படுத்தி 4 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்கல்வி/ மருத்துவ படிப்பில் சேர்கிறார். Y அடுத்த ஆண்டில் 3 வருட பட்டப்படிப்பில் சேர்ந்து X க்கு முன்னரே பட்டதாரி ஆகிறார் எனில் யாருக்கு First Graduate Cortificate வழங்கப்பட வேண்டும்.

X அல்லது Y, இதில் யார் முதலில் பட்டப்படிப்பு முடித்தவரோ அவருக்கு (i.e. Month and Year of passing) வழங்கலாம்.

X மற்றும் Y, இருவரும் ஒரே ஆண்டில் பட்டப்படிப்பு முடித்திருந்தால் தேர்ச்சி அடைந்த மாதத்தைக் (Month of passing) கணக்கில் கொண்டு முதலில் முடித்தவருக்கு வழங்கலாம்.

X மற்றும் Y, இருவரும் ஒரே ஆண்டில் ஒரே மாதத்தில் பட்டப்படிப்பு முடித்திருந்தால் (Month and Year of passing) X-க்கு வழங்கலாம்.

5. X முதலில் பட்டப்படிப்பில் சேர்ந்து பட்டதாரி ஆவதற்கு முன்னரோ அல்லது பட்டதாரி ஆகி First Graduate Certificate பெற்று வேலையில் சேருவதற்கு முன்னரோ துருதிஷ்டவசமாக இறந்து விடுகிறார் எனில், அதன் பின்னர் பட்டதாரியான Y-க்கு Flrst Graduate Certificate வழங்க பரிசீலனை செய்யலாம்.

6. அண்ணன், தம்பிகள் அவர்களுடைய மனைவி. மகன் / மகள் ஆகியோருடன் இணைந்து ஒரு கூட்டு குடும்பமாக (Joint family) ஒரே வீட்டில் வசிக்கும் பட்சத்தில் அக்குடும்பத்தில் முதலில் பட்டப்படிப்பு முடித்தவருக்கு First Graduate Certificate வழங்கலாம்.

7. ஒருவருக்கு Frst Gradunte Certificate வழங்குவது தொடர்பாக அதே குடும்பத்தில் மற்றொருவர் ஆட்சேபணை செய்தாலோ அல்லது நீதிமன்றத்தினை நாடினாலோ அத்தகைய நேர்வுகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

& வரிசை எண்.4-இல் உள்ள வழிமுறையை கருத்தில் கொண்டு முடிவு செய்யலாம்

8. குடும்பத்தில் முதல் தலைமுறையினர் Frst Graduate Certificate சலுகையினை ஏற்கனவே பயன்படுத்தியுள்ளார் என்ற விபரத்தினை பராமரிப்பது எவ்வாறு? பொதுவாக சான்றிதழ் வழங்கும் போது விண்ணப்பிக்கும் நபர் அணிக்கும் Sporting documents-ஐ ஆய்வு செய்து சரியானது என உறுதி செய்து சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்நிலையில் விண்ணப்பிக்கும் நபர் இச்சலுகை ஏற்கனவே அக்குடும்பத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற விபரத்தினை தெரிவிக்காது

அக்குடும்பத்தின் அடுத்த தலைமுறையினர் மீண்டும் இச்சலுகையினை பயன்படுத்த முனையும் பட்சத்தில் அவர்களது முன்னோர்கள் ஏற்கனவே இச்சலுகையினை பயன்படுத்தியுள்ளனரா என்பது தொடர்பாக கண்டறிய மாணவர்கள் பட்டப்படிப்பு சேர்க்கையின் பொழுது, கல்விக் கட்டணச் சலுகை பெற முதல் பட்டதாரி சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும் பொழுது பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையினையே இதற்கும் பின்பற்றலாம்.

9. ஒருவர் First Graduate Certificate பெறுவதற்கு விண்ணப்பிக்கும் நபர் 10+2 என்ற வகையில் பின்வரும் முறைகளில் பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016- பிரிவு 25-இல் பட்டங்கள்/ பட்டயங்கள்/முதுகலைப் பட்டங்களை பொதுப்பணிகளுக்கு அங்கீகரிப்பது தொடர்பாக நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி, பள்ளி இறுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு) மற்றும் பள்ளி மேல்நிலைக் கல்வித் தேர்வு (+2) தேர்ச்சிப் பெற்ற பின்னர் பல்கலைக் கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் வழங்கும் பட்டங்கள் / பட்டயங்கள் (i.e. 10+2+3 Pattern of studies) மட்டுமே பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்கும் / பதவி உயர்விற்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்கலாம்.

10. முதல் தலைமுறை பட்டாணி சான்றிதழ் பெறுவதற்கு வயது வரம்பு ஏதும் இல்லை.

11. முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் பெறுவதற்கான ஆண்டு வரையறை கிடையாது: மேலும், எந்த ஆண்டு பட்டப்படிப்பு முடித்திருந்தாலும் முதல் தலைமுறை பட்டதாரியாக இருக்கும் பட்சத்தில் இச்சான்றிதழ் பெற தகுதியுடையவராகிறார்.

12. தொலைதூர கல்வி மற்றும் திறந்தவெளி கல்வி பயின்று முதல்தலைமுறை சான்றிதழுக்கு விண்ணப்பிப்பவர் கீழ்க்காணும் நிபந்தனைகள் பெற்றிருக்க வேண்டும்.

. பள்ளி இறுதித் தேர்வு (பத்தாம் வகுப்பு) மற்றும் பள்ளி மேல்நிலைக் கல்வித் தேர்வு (42) ஆகியவைகளில் தேர்ச்சி பெற்றப்பின், தொலைதார கல்வி மற்றும் திறந்த வெளிப் பல்கலைக் கழகங்களின் வழியாக பெறப்படும் பட்டயம்/ பட்டம்/ முதுகலைப் பட்டங்களை மட்டும் பொதுப்பணிகளில் நியமனத்திற்கும் பதவி உயர்விற்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்கலாம்.

13. குழந்தைகளாக பிறக்கும் இரட்டையர்களில் வளர்ந்த பிறகு முதல் தலைமுறை பட்டதாரி சலுகை, அரசு கடிதம் (நிலை) எண்.315, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 13.11.2017-இன்படி பட்டதாரி இல்லாத குடும்பத்தில், முதல் பட்டதாரி சலுகை கோரும் முதல் இரட்டையர்கள் இருவருக்கும் வழங்கலாம்.

14. முதல் தலைமுறை பட்டதாரி சான்று வழங்குவதற்கான பிற நடைமுறைகள்:-

மனுதாரர் தான் வசித்து வரும் இருப்பிடத்திற்கு உட்பட்ட வட்டாட்சியரிடம் பொது இ-சேவை மையத்தின் மூலம் முதல் தலைமுறை பட்டதாரி சான்றுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

15. முதல் தலைமுறை பட்டதாரி சான்றுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்:

1.அரசு. அரசு உதவி பெறும் மற்றும் தனியார் சுயநிதி தொழிற்கல்லூரிகளில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சார்ந்த முதல் பட்டதாரி மாணவ/ மாணவியர்.

2. வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசு பணியிடங்களில் முன்னுரிமை பெறுவோர்.

குடும்பம்: முதல் பட்டதாரி சான்று பெற குடும்ப நபர்கள் என்பது சம்மந்தப்பட்ட குடும்பத்திலுள்ள தந்தை. தாய் அவர்களின் பெற்றோர் மற்றும் மாணவன் / மாணவியின்

உடன்பிறப்புகளைக் குறிக்கும்.

16. சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

1. புகைப்படம்

2. முகவரிக்கான சான்று

3. மனுதாரரின் மாற்றுச் சான்றிதழ் / வேலைவாய்ப்பு அட்டை

(கல்விக் கட்டண சலுகைக்காக (வேலை வாய்ப்புக்காக விண்ணப்பிப்போர்)

விண்ணப்பிப்பவர்கள்)

4. மனுதாரர் மற்றும் பெற்றோரின் உறுதிமொழி படிவம்

5. பெற்றோரின் பள்ளி மாற்றுச் சான்றிதழ்

6. குடும்ப அட்டை

7. மனுதாரரின் கல்விச் சான்றிதழ்கள்

17. முதல் தலைமுறை பட்டதாரி சான்று வழங்கும் நடைமுறை:-

1) மனுதாரர் மேற்படி ஆவணங்களுடன் பொது இ-சேவை மையத்தில் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

2) மேற்படி விண்ணப்பம் கிராம நிருவாக அலுவலர் விசாரணைக்குப்பின் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பப்படும்.

3) கிராம நிருவாக அலுவலர் / வருவாய் ஆய்வாளர் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்தும், கள விசாரணை மேற்கொண்டும் விண்ணப்பத்தினை ஏற்கவோ / திருப்பியனுப்பவோ / நிராகரிக்கவோ தகுந்த காரணங்களுடன் மண்டல துணை வட்டாட்சியருக்கு ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும். வருவாய் ஆய்வாளரின் அறிக்கை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் மண்டல துணை வட்டாட்சியர் சான்று வழங்கிட வேண்டும்.

4) மனுதாரர் முதல் தலைமுறை பட்டதாரி சான்றினை குறுஞ்செய்தி வரப்பெற்றவுடன் இணையவழியில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

18.மேல்முறையீடு:

மண்டல துணை வட்டாட்சியரின் உத்தரவிற்கு எதிராக வட்டாட்சியரிடம் சான்று நிராகரிக்கப்பட்ட 60 நாட்களுக்குள் விண்ணப்பிக்கலாம். மேற்படி நிராகரிப்பு செய்யப்பட்டது தவறு என தெரிய வரும் பட்சத்தில் மீள பரிசீலனை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க அறிவுறுத்தி மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும். நிராகரிப்பு உத்தரவு சரியானது எனில் உறுதி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

19. சீராய்வு:

வட்டாட்சியரால் வழங்கப்பட்ட மேல்முறையீட்டு உத்தரவினை எதிர்த்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 60

20. மனுதாரர் தவறான தகவல் அளிக்கும். பட்சத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்:-

நாட்களுக்குள் தொடர்புடைய வருவாய் கோட்டாட்சியரிடம் விண்ணப்பிக்கலாம். மேற்படி நிராகரிப்பு செய்யப்பட்டது தவறு என தெரிய வரும் பட்சத்தில் மீள பரிசீலனை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க அறிவுறுத்தி மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும். நிராகரிப்பு உத்தரவு சரியானது எனில் உறுதி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

தவறான தகவல் அளித்து கல்வி கட்டண சலுகை பெற்ற மாணவ / மாணவியர் மீதும் மற்றும் அதேபோன்று முதல் தலைமுறை பட்டதாரி சான்று பெற்று அதன் அடிப்படையில் வேலை

வாய்ப்பு பெற்றிருப்பவரின் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுப்பதோடு, மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை மூன்று மடங்காக சம்மந்தப்பட்ட மாணவர்களிடமிருந்தோ அல்லது அவரது பெற்றோரிடமிருந்தோ வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூலிக்கலாம் மற்றும் முதல் தலைமுறை பட்டதாரி சான்று பெற்று அதன் அடிப்படையில் வேலை வாய்ப்பு பெற்றிருப்பவரின் மொத்த முழு ஊதியத்தையும் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் திரும்ப வசூலிக்கலாம்.

தவறான உறுதிமொழி அல்லது தவறான ஆவணங்களை சமர்ப்பித்து முதல் தலைமுறை பட்டாதாரி சான்றிதழ் பெறப்பட்டதாக பின்னர் தெரிய வந்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் வட்டாட்சியரால் ரத்து செய்யப்படும்.

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

# TNROA மண்டல அளவிலான சங்கப் பயிலரங்கம்

| வ. எண். | நாள் | பயிற்சி நடைபெறும் இடம் | கலந்து கொள்ளும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | 15.07.2023 | திருவள்ளூர் | சென்னை<br>காஞ்சிபுரம்<br>வேலூர்<br>இராணிப்பேட்டை<br>செங்கல்பட்டு<br>திருவள்ளூர் |
| 2. | 16,07,2023 | கடலூர் | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி<br>திருவண்ணாமலை<br>கடலூர் |
| 3. | 29.07.2023 | கோயம்புத்தூர் | ஈரோடு<br>நீலகிரி<br>திருப்பூர்<br>கரூர்<br>கோயம்புத்தூர் |

இப்பயிலரங்கில் மேற்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மத்திய செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்வதை உறுதி செய்யுமாறு தோழமையோடு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

( மற்ற மாவட்டங்களுக்கான பயிலரங்க விவரங்கள் 05.08.2023 மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக தெரிவிக்கப்படும் )

ஒம்/- ஒம்/-
(சு.சங்கரலிங்கம்) (எம்.பி.முருகையன்)
பொதுச் செயலாளர், மாநிலத் தலைவர்

# ஜாக்டோ-ஜியோ (JACTTO-GEO)
## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

நாள்: 20-07-2023

பெறுநர்

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அவர்கள்,

தலைமைச் செயலகம்,

சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

பொருள் : ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களுடன் கடந்த 84,23 அன்றைய பேச்சுவார்த்தை - தொடர் நடவடிக்கை ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கன் மாண்புமிகு தமிழக முதலமைச்சரை சந்தித்திட உரிய நேரம் பெற்றுத் தருமாறு கோருதல் தொடர்பாக.

***

வணக்கம்.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்கள் கோரிக்கைகள் தொடர்பாக கடந்த 8.4.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு அமைச்சர்கள் (நெடுஞ்சாலைத்துறை, நிதி (ம) மனிதவள மேலாண்மைத்துறை மற்றும் பள்ளிக்கல்வித் துறை) ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களோடு நடத்திய பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து, ஒன்றிய அரசிற்கு இணையான அகவிலைப்படியினை 1.7.2023 முதல் உடனுக்குடன் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களுடன் 8.4.2023 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு, ஏறத்தாழ மூன்று மாதங்கள் கடந்த நிலையில், ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக எந்தவித முன்னேற்றமும் இல்லை என்பதனை தங்களின் பணிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதிலும் குறிப்பாக, காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பினை மீண்டும் வழங்குவது மற்றும் தேர்தல் கால் வாக்குறுதியான மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டடத்தினை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து அரசின் மௌனமானது ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியினை ஏற்படுத்தி உள்ளது.

அரசுக்கும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்களுக்கும் நல்லுறவினை ஏற்படுத்தும் விதமாக செயலாற்றிவரும் தமிழக அரசு, ஏற்கனவே தாங்கள் 8.4.2023 அன்று உறுதியளித்ததன் அடிப்படையில், ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை சந்திக்க உரிய நேரத்தினைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

ABSTRACT

Public Services - Medical Test for Drivers of Government Vehicles -Eye sight and hearing / reflex tests - Revised - Orders- Issued.

**Human Resources Management (K) Department**

G.O.(Ms.) No. 32 Dated: 19.04.2023

சோபகிருது, சித்திரை - 06

திருவள்ளுவர் ஆண்டு - 2054

Read:-

1. G.O.(Ms.)No.86, Personnel and Administrative Reforms (R) Department, dated 08.02.1996.

Than

2. Letter received from the Principal Secretary to Government (FAC), Public (Estt.3) Department, No. 20141/Estt.3/2018-11, dated 20.06.2019.

3. Letter received from the Director of Medical Education, Kilpauk, Chennai-10, Ref. No.11450/H&D1(2)/2021, Dated 10.05.2022

4. Letter received from the Director and Superintendent of the Regional Institute of Ophthalmology and Government Ophthalmic Hospital, Egmore, p.o.No. 2441//2021, dated 08.06.2021.

*****

Order:

In the Government Order first read above, orders have been issued that the drivers of Government Vehicles should undergo Medical tests, as indicated below:-

| Age | |
|---|---|
| Less than 40 years | No test |
| 40 to 52 years | Once in 3 years |
| After 52 years | Once in a year |

For the above purpose, free eye camp shall be conducted by the Health department. It was also ordered that if any driver is declared unfit for continuance in the same post by

doctors, because of eye defect, or any other allment, he will be provided with alternative employment in posts like Helpers or Office Assistants, depending upon their qualifications, by retaining the same pay scale. Accordingly, the Tamil Nadu Basic Service Rules has also been amended vide GO(Ms) No. 60, Personnel and Administrative Reforms (F) Department, dated 06.05.2007.

2. In the reference second read above, during the final inspection of Personnel and Administrative Reforms (Inspection) Department (now Human Resources Management Department) in the Public Department, conducted on 01.10.2018, the final Inspection Officer te, the Principal Secretary to Government, Handlooms, Handicrafts Textiles and Khadi Department, among other things, has suggested to issue necessary orders to get the fitness certificate along with eye sight and hearing/reffex testing certificate to Drivers who are working under the control of Public (Motor Vehicles) Department, once in a year for the age group of above 40 years and once in two years for the age group of below 40 years.

3. In this regard, the Director of Medical Education, Kilpauk, Chennai-10 and the Director and Superintendent of the Regional Institute of Ophthalmology and Government Ophthalmic Hospital, Egmore, Chennai have, after convening the meeting with the Medical Professionals, suggested the following procedures to conduct medical tests (eye sight and hearing/reffex tests) for drivers of Govemment vehicles, working in all departments, as below:-

(1) Below 50 years - Once in two years

(ii) Above 50 years - Once in a year

4 The Government after careful examination have decided to accept the suggestion of the Director of Medical Education, Kilpauk, Chennai-10 and the Director and Superintendent of the Regional Institute of Ophthalmology and Government Ophthalmic Hospital, Egmore, Chennai and accordingly direct that the Drivers of Government Departments should undergo Medical tests, as indicated below:-

| Age | Periodicity |
|---|---|
| Below 50 years | Once in 2 years |
| Above 50 years | Once in a year |

5. The Government also direct that, if any Driver is declared unfit for continuance in the same post by doctors because of eye defect or any other aitment, he will be provided with alternative employment in posts like Helpers or Office Assistants, etc., in the Tamil Nadu Basic Service, depending upon their qualifications, by retaining them in the same pay matrix cell, as provided in the Special Rules for Tamil Nadu Basic Service.

(BY ORDER OF THE GOVERNOR)

MYTHILI K. RAJENDRAN
SECRETARY TO GOVERNMENT

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

## THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

**மாநில மையம்**

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

# வைர விழா ஆண்டு
# மத்திய செயற்குழு கூட்டம்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் கடந்த 03.08.1964-ஆம் ஆண்டு மதுரை மாநகரில் தொடங்கப்பட்டு 1966ஆம் ஆண்டு தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, அலுவலக உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரையிலான ஊழியர்களின் நலன்களை காத்திட, தொடர்ந்து இயங்கி வரும் அமைப்பாகும்.

வைர விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நமது சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம் 05.08.2023 சனிக்கிழமை அன்று சீரும் சிறப்புமிக்க சிவகங்கை மாநகரில் நடைபெற உள்ளது.

இந்த மத்திய செயற்குழு கூட்டத்திற்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருவாய்த்துறை அலுவலர்கள் திரளாக வருகை புரிந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக விவாதம் செய்து, அதனடிப்படையில் தீர்மானங்கள் இயற்றப்பட உள்ளன.

இந்நிகழ்வில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை **அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்களும், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் **திருமதி A.அஷா அஜித் இ.ஆ.ப.,** அவர்களும், மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.ப.மணிவண்ணன்** ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்க உள்ளனர்.

எனவே, சிறப்புமிகு வைர விழா ஆண்டு மத்திய செயற்குழு கூட்டத்திற்கு அனைத்து தோழர்களும் தவறாது கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மாநில மையம்
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டப் பொதுக்குழு மற்றும் பயிலரங்கில் மாநிலத் துணைத் தலைவர்கள் தோழர் வெ.அர்த்தநாரி, தோழர் ஏ.மணிகண்டன் மற்றும் மாநிலச் செயலாளர் தோழர் ட்டி.ஜோஷி ஆகியோர் கலந்துகொண்டனர்



கோவையில் நடந்த மாவட்டப் பொதுக் குழுவில் மாநிலச் செயலாளர் தோழர் செந்தில்குமார் பங்கேற்பு



தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் 72 மணி நேர தொடர் பட்டினிப்போராட்டத்தில் மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன் எழுச்சியுரை

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
June 2023

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TN/PMG (CCR) / WPP- 3 / 2015-2017

பெறுநர்:
திரு / திருமதி

தமிழ்நாடு மாண்புமிகு சட்டத்துறை
அமைச்சர் அவர்களை வருவாய்த்துறை
அலுவலர்களின் கோரிக்கை தொடர்பாக
சந்தித்தபோது மாநில தலைவர்
எம்.பி.முருகையன் சால்வை அணிவித்தார்.
உடன் பொதுச் செயலாளர் ச.சங்கரலிங்கம்
மற்றும் பொருளாளர் வெ.சோமசுந்தரம்



If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005.



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.